# தற்காலத் திரைப்படப் பாடல்களில் சங்க இலக்கியப் பாடல்களின் தாக்கம்

*மோ. கணேசன்*
முனைவர் பட்ட ஆய்வாளர், இதழியல் மற்றும் புதிய ஊடகப் புலம்
தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம், சென்னை

*முனைவர் பு. சித்ரா*
உதவிப் பேராசிரியர், இதழியல் மற்றும் புதிய ஊடகப் புலம்
தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம், சென்னை

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6456

***ஆய்வுச்சுருக்கம்***

*இவ்வுலகில் நாம் பிறந்தது முதலே பாட்டு கேட்டுத்தான் வளர்கிறோம். தாயின் தாலாட்டு பாடலைக் கேட்பதில் இருந்து நமது பாடல் கேட்கும் திறனும், அதை ரசிக்கும் திறனும் தொடங்குகிறது. வளர்ந்த பின்பு அவற்றை எழுதிப்பாடும் திறனும் வளர்கிறது. அப்படி பாட்டு கேட்டு வளர்ந்த பாட்டுக்குலம் எதுவெனில், இப்புவியில் அது மானுட குலமாகத்தான் இருக்கும். அந்த மானுட குலத்தில் தனிப்பெரும் இடம்பிடித்த குடி, நம் தமிழ்குடி. ஆதி காலம் தொட்டே நம்மவர்கள் சொல்ல விரும்பியதை பாடல்களாக, செய்யுள்களாகத்தான் சொல்லியிருக்கிறார்கள். உரைநடையாக சொன்னது இல்லை. அத்தகைய மரபார்ந்த, பாட்டினை உயிர் மூச்சாகக் கொண்டு வளர்ந்த இனம் நம் தமிழினமாகும். அத்தகைய தமிழினம் பொம்மலாட்டம், தோல்பாவைக்கூத்து, தெருக்கூத்து, நாடகம் என பல்வேறு பொழுதுப்போக்கு கலைகளை உருவாக்கியது. அத்தகைய கலைகளை பாடல்களே வளர்த்தெடுத்தது. அறிவியல் முன்னேற்றத்தின் காரணமாக அந்த பொழுதுபோக்கு கலைகள், திரைப்பட ஊடகமாக மாறியது. பலரையும் அது வசீகரம் செய்தது. அந்த வசீகரத்திற்கு பாடல்கள் முக்கிய காரணியாக இருந்தன. தொடக்ககால தமிழ் படங்களில் 50 முதல் 60 பாடல்கள் இடம்பெற்றன. அந்த பாடலுக்கான கருப்பொருள்கள் நம்முடைய சங்க இலக்கியங்களில் இருந்து எடுத்தாளப்பட்டன. தமிழ் திரைப்படத்துறையின் முதல் கவிஞர் என போற்றப்படும் மதுரகவி பாஸ்கரதாஸ், 1931ல் தமிழ் திரையுலகின் முதல் பேசும் படமான காளிதாஸில் அனைத்துப் பாடல்களையும் எழுதினார். அன்று தொடங்கிய இந்த பாட்டுப் பயணம் என்றும் தாய்த்தமிழ்போல வளர்ந்துகொண்டே இருக்கும். தொடக்க காலங்களில் அக்கால கவிஞர்களான பாரதியார், பாரதிதாசன் போன்ற கவிஞர்களின் பாடல்களும் திரைப்படங்களில் எடுத்தாளப்பட்டன. ஆனால், சங்ககாலப் பாடல்களை தானெழுதிய திரைப்படப் பாடல்களில் மிகப் பொருத்தமாக பயன்படுத்தியவர் கவிஞர் கண்ணதாசன். அவரைப் பின்பற்றி இன்னும் பல கவிஞர்களும் பயன்படுத்தியிருக்கிறார்கள். அக்காலப் பாடல்கள் மக்கள் மனதில் நீங்காதிருந்தன. இன்றும் நீங்காதிருக்கின்றன. அதற்கு இந்த சங்க இலக்கியங்களும் முக்கிய காரணம். அத்தகைய சிறப்பு வாய்ந்த சங்க இலக்கியப் பாடல்களின் தாக்கம், இப்போதிருக்கும் தற்கால திரைப்படப் பாடல்களில் இருக்கிறதா? இல்லையா? என்பதை ஆய்வு செய்கிறது இக்கட்டுரை.*

***குறிப்புச் சொற்கள்:*** *திரைப்படப்பாடல்கள், சங்க இலக்கியங்கள், தமிழ் திரைப்படப்பாடல்கள், தற்கால கவிஞர்கள், புலவர்கள், சங்ககால இலக்கியங்கள், தமிழ் இலக்கியங்களும் திரைப்படப்பாடல்களும்*

## முன்னுரை

தமிழ் திரைப்பட வரலாறு 1930களில் இருந்து தொடங்குகிறது. தமிழின் முதல் பேசா மொழி திரைப்படமான கீசகவதம் திரைப்படத்தில் பாடல்களே கிடையாது. முதல் பேசும்படமான காளிதாஸில் பாடல்களின் ஆவர்த்தனம் தொடங்கிற்று. ஒரு படத்தில் 50 முதல் 60 பாடல்கள் என்ற கணக்கில் அன்று தொடங்கிய இந்த பாடல் பயணம், இன்று ஒரு படத்திற்கு 4 முதல் 6 பாடல்கள் என்ற கணக்கில் வந்து நிற்கிறது. தமிழர்கள் வாழ்வில் காதலும் வீரமும் பின்னிப்பிணைந்தே வந்திருக்கின்றன. அதனை எடுத்துக்காட்டும் காலக்கண்ணாடிகளாக நமது சங்க இலக்கியங்கள் திகழ்ந்திருக்கின்றன. அகநானூறு, புறநானூறு, திருக்குறள் என எண்ணற்ற இலக்கியங்கள் பாடல் வடிவிலே தமிழரின் வாழ்வியலை, காதலை, வீரத்தை, வரலாற்றை பொதிந்து வைத்திருக்கின்றன. அத்தகைய பாட்டு வழிப்பரம்பரையில் வந்த தமிழ்க்குடி, திரைப்படத்துறையிலும், இக்காலத்திற்கு ஏற்றபடி பாடல்களை புகுத்தியது. புதிய புதிய கவிஞர்கள் தோன்றினார்கள். காலத்தால் அழியாத பாடல்களைத் தந்தனர். அத்தகைய பாடல்களில் சங்க இலக்கிய பாடல்களின் தாக்கம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை ஆராய்கிறது இந்த கட்டுரை.

## ஆய்வின் நோக்கம்

கவிஞன் என்பவன் உள்ளதை சொல்லும் உண்மை விளம்பியாகவும், கற்பனை உலகில் உலவும் அதீத கற்பனையாளனாவும், வாழ்வியலை சொல்லும் தத்துவவாதியாகவும், புரட்சியை சொல்லும் புரட்சியாளனாகவும் மாறிக்கொண்டே இருப்பான். தான் வாழும் காலத்தில் இருக்கும் சமூகத்தை பிரதிபலிப்பவன் கவிஞன். இத்தகைய திறன் வாய்ந்த புலவர்கள் சங்ககாலம் தொட்டே நம் தமிழ் சமூகத்தில் இருந்தது நமக்கு கிடைத்த பேறு. அவர்கள் பாடிய பாடல்கள், செய்யுள்கள் மூலமாகவே அக்கால மக்களின் காதல், வீரம், கொடை, வாழ்வியல் முறை என அனைத்தையும் அறிந்துகொள்ள முடிந்தது. ஒருவர் நன்றாக எழுதியதை மேற்கோள் காட்டி மற்ற புலவர்கள் எழுதியது அவர்களின் புலமைக்கு கிடைத்த சான்று. அன்று மட்டும் தான் புலவர்கள் இருந்தார்களா, இன்று இல்லையா என்றால், இருக்கிறார்கள். புலவர்களும் இருக்கிறார்கள் கவிஞர்களும் இருக்கிறார்கள். அவர்களும் பாடல்களை எழுதுகிறார்கள். இன்றைய கவிஞர்கள் எழுதும் திரைப்பட பாடல்களில் சங்க கால இலக்கியங்களின் தாக்கம் இருக்கிறதா? இல்லையா? என்பதை ஆராய்வது இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வின் எல்லை

குறுந்தொகை, திருக்குறள் உள்ளிட்ட சங்ககால இலக்கியங்கள் ஆய்விற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. கவிஞர் கண்ணதாசனின் காலம் தொட்டு இன்றுள்ள கவிஞர்களின் காலம் வரை உள்ள பாடல்களை தற்காலப் பாடல்களாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. சங்ககாலப் பாடல்களும் தற்காலப் பாடல்களும் முழுமையாக படித்து பொருளுணரப்பட்டுள்ளன.

## அற்றைத் திங்கள்

கடையேழு வள்ளல்களில் ஒருவர் பாரி. தமிழில் பெரும்புலமை பெற்ற புலவர்களை ஆதரிப்பதில் இவருக்கு நிகர் எவருமில்லை. பாரி குறித்து சங்ககாலப் புலவரான கபிலர் நிறைய பாடல்களை எழுதியுள்ளார். பாரிக்கு அங்கவை, சங்கவை என்று இரண்டு மகள்கள். கபிலரை ஆசானாகக் கொண்டு, அவரிடம் அங்கவையும் சங்கவையும் பாடம் படித்தவர்கள். பாரி இறந்துவிடவே, அவரின் பிரிவை தாங்காமாட்டாது பாரியின் மகள்களான அங்கவையும் சங்கவையும் பாடிய புறநானூற்றுப் பாடல்

**"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்**
**எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர்கொளார்**
**இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்**
**வென்றெறி முரசின் வேந்தர்எம்**
**குன்றும் கொண்டார்யாம் எந்தையும் இலமே"**

இப்பாடலின் பொருளை பார்க்குங்கால், மூவேந்தரும் முற்றுகை இட்டிருந்த அந்த நிலாக் காலத்து வெண்மையான நிலவொளியில் எங்கள் தந்தை (பாரி) எங்களுடன் இருந்தார். எங்களுடைய மலைக்குன்றும் அப்போது எங்களிடம்தான் இருந்தது. இந்த நிலாக் காலத்தில் அதை வென்று முரசு ஒலிக்கும் இந்த வேந்தர்கள் எங்கள் மலைக்குன்றையும் அபகரித்து விட்டார்கள். நாங்கள் எங்கள் தந்தையை இழந்து நிற்கின்றோம். (புலியூர் கேசிகன், 2010)

தந்தையை இழந்த இரு மகள்களின் வலியை சொல்லும் இப்பாடலை, அப்படியே கவிஞர் கண்ணதாசன் காதலன் பிரிந்தால் தவிக்கும் காதலியின் வலியாக மாற்றி எழுதியிருப்பார். 1967ல் வெளிவந்த "நாடோடி" என்ற திரைப்படத்தில் கண்ணதாசன் எழுதிய வரிகள்

**"அன்றொரு நாள் இதே நிலவில்**
**அவர் இருந்தார் என் அருகே**
**நான் அடைக்கலம் தந்தேன் என் அழகை**
**நீ அறிவாயே வெண்ணிலவே"**

இந்த பாடல் அக்காலத்து பெண்களும் சோக கீதமாக ஒலித்தது. காதல் பிரிவால் தவிக்கும் பெண்கள் மட்டுமின்றி, ஒவ்வொரு பெண்களும் இப்பாடல் வரிகளின் எளிமையையும், நுட்பத்தையும், கருத்தாழத்தையும் ரசித்து பாடி தங்களின் சோகத்திற்கு வடிகாலைத் தேடிக் கொண்டனர்.

கண்ணதாசனோ இந்த பாடலை சோகப்பாடலாக மாற்றியிருந்தார். ஆனால், கவிஞர் வைரமுத்துவோ இந்த புறநானூற்றுப் பாடலின் முதல் வரியை மட்டும் எடுத்துக் கொண்டு, காதல் பாடலாக மாற்றிவிட்டார். 1997ல் வெளிவந்த "இருவர்" படத்தில் "நறுமுகையே நறுமுகையே" எனத் தொடங்கும் பாடலின் அனுபல்லவி வரிகளை

**"அற்றைத் திங்கள் அந்நிலவில்**
**நெற்றிதரள நீர்வடிய**
**கொற்றப் பொய்கை ஆடியவள் நீயா"**

என்று எழுதியிருப்பார். இப்பாடல் அன்றைய காலகட்டத்தில் மிகவும் பேசப்பட்டது. தூய தமிழ்ச்சொற்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட பாடல் என்று ரசிகர்களால் போற்றப்பட்டது. ஒவ்வொரு வீடுகளிலும் கடைகளிலும் திருமண விழாக்களிலும் ஒலித்துக்கொண்டே இருந்தது.

### இருக்கிறதா? இல்லையா?

பதினெண் சித்தர்களில் ஒருவர் திருமூலர். 5000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் இவர் என்றும் சொல்லப்படுகிறது. இவர் எழுதிய நூல் திருமந்திரம். இந்த திருமந்திரம் தமிழின் ஆகம நூல் என்று அழைக்கப்படுகிறது. 3000 பாடல்களைக் கொண்டதால் இது தமிழ் மூவாயிரம் என்றும் அழைக்கப்படுகிறது. திருமூலர் எழுதிய 5வது மந்திரத்தில் உள்ள 1506வது பாடல்

**"உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் என்பவர்க்கு**
**உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் எம்மிறை**
**உள்ளத்தும் இல்லை புறத்தில்லை என்பவர்க்கு**
**உள்ளத்தும் இல்லை புறத்தில்லைதானே?"**

என்று எழுதியிருக்கிறார்.

இதற்கான பொருள், எங்கும் நிறைந்துள்ள சிவபெருமானை ஆருயிர்களின் உள்ளத்து முளன் புறத்துமுளன் என்று அன்புடன் சிவாயநம என்னும் செந்தமிழ்மறை ஓதி வழிபடுவார்க்கு எம்மிறையாகிற அச்சிவபெருமான் வெளிப்பட்டு நன்மை அருள்வன். உள்ளத்தும் இல்லை புறத்தும் இல்லை என்று கூறுபவர்க்கு உள்ளத்தும் புறத்தும் வெளிப்படாது மறைந்து நின்று நன்மையருள்வானல்லன். இல்லை என்பதன் பொருள் சிவபெருமானால் எய்தும் நன்மை இல்லை என்பதாம். (தமிழ் இணைய பல்கலைக்கழகம்)

இதையே அற்புதமாக உள்வாங்கிய கண்ணதாசன், 1962ல் வெளிவந்த "பார்த்தால் பசி தீரும்" படத்தில் "உள்ளம் என்பது ஆமை" என்ற தத்துவப்பாடலை எழுதியிருப்பார். அதில்

**"தெய்வம் என்றால் அது தெய்வம்**
**அது சிலையென்றால் வெறும் சிலைதான்**
**உண்டென்றால் அது உண்டு**
**இல்லையென்றால் அது இல்லை"**

என்ற வரிகளை எழுதியிருப்பார். இப்பாடலில் திருமூலர் சொன்னதை மிக எளிதாக பாமரனுக்கும் புரியும்படி எழுதிவைத்தார் கண்ணதாசன். இப்பாடல் வெளிவந்த சமயத்தில் அக்காலத்து பெரியவர்களின் வாயெல்லாம் இப்பாடலை முணுமுணுத்துக்கொண்டே இருந்தது. புரியாத பொருள் கொண்ட செய்யுளை எளிமையாக மாற்றி எழுதினால், அதிலும் திரைப்பாடலாக எழுதினால் பட்டி தொட்டி எங்கும் பரவும் வல்லமை கொண்டது என்பதற்கு இப்பாடல் அக்காலகட்டத்தில் சான்றாக விளங்கியது.

### ஓருயிர் ஈருடல்

சங்ககாலப் புலவர்களில் ஒருவர் சிறைக் குடி ஆந்தையார். ஆதன் தந்தை என்னும் சொற்கள் ஒன்றுசேரும்போது ஆந்தை என அமையும் என்று தொல்காப்பியம் சொல்கிறது. சிறைக்குடி இவரது ஊர். அதனால் இவர் சிறைக்குடி ஆந்தையார் என்று அழைக்கப்படுகிறார். இவர் எழுதிய பாடல்களில் 9 பாடல்கள் மட்டுமே நமக்கு கிடைத்திருக்கிறது. இவர் எழுதிய பாடல்களில் ஒரு பாடலை இங்கு ஆராய்வோம். காதலர்கள் எப்போதும் ஈருடலாக இருந்தாலும் ஓருயிர் என்றே சொல்வார்கள். பிரிவினை கிஞ்சித்தும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். காதல் மிகுந்த தலைவன், தலைவியின் பிரிவுத் துன்பத்தை, சங்ககால குறுந்தொகைப் பாடலின் மூலம் தனது அற்புதமான உவமை மூலமாக நம் கண்முன் நிறுத்துகிறார் சிறைக்குடி ஆந்தையார்.

**"பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன**
**நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்**
**பிரிவரி தாகிய தண்டாக் காமமொடு**
**உடனுயிர் போகுக தில்ல கடனறிந்**
**திருவேம் ஆகிய வுலகத்**
**தொருவே மாகிய புன்மை நாம் உயற்கே."**
**(குறுந்தொகை, பாடல் – 57)**

நீர்வாழ்ப் பறவை அன்றில். ஆணும் பெண்ணுமாக ஒன்றையொன்று பிரியாமல் வாழ்வன. அவை குளத்தில் இணைந்து செல்லும்போது, அவற்றின் இடையே பூ ஒன்று இடைப்பட்டு தடையை ஏற்படுத்தினாலும் அந்த ஒரு நொடி பிரிவை ஓர் ஆண்டு கால அளவிலான பிரிவாக எண்ணி வருந்துமாம். அந்தப் பறவைகள் போல ஓருயிர் ஈருடல்களாக நாங்கள் வாழ்கிறோம். தலைவன் பிரிந்தபோது ஓருயிர் ஓருடலில் வாழும் இழிவு ஏற்படும். அதற்கு, தலைவன் பிரிந்தவுடன் என்னுயிரும் போய்விடுவது மேலானது என்கிறாள் நெய்தல் நிலத்தைச் சேர்ந்த தலைவி. (ம.வே.பசுபதி. 2010)

இந்த பாடலை இசைஞானி இளையராஜாவின் இசையில் வாலிபக் கவிஞர் வாலி, 1990ல் வெளியான "கேளடி கண்மணி" படத்தில், காதல் பாடல் ஒன்றை எழுதியிருப்பார்.

**"ஆண் : நீ பாதி நான் பாதி கண்ணே**
**பெண் : அருகில் நீயின்றி தூங்காது கண்ணே**
**ஆண் : நீ பாதி நான் பாதி கண்ணே**
**பெண் : அருகில் நீயின்றி தூங்காது கண்ணே**
**ஆண் : நீயில்லையே இனி நானில்லையே**
**உயிர் நீயே"**

இந்த வரிகளில் "நீ பாதி. நான் பாதி. நீயில்லை எனில் நானும் இல்லை. உயிர் நீதான்" என்று கவிஞர் மிக அழகாகச் சொல்லியிருக்கிறார். 90களில் ஆகச்சிறந்த காதல் பாடல்களில் இது முதலிடம் பிடித்தது. காதலர்களின் கீதமாகவே மாறிப்போனது. அந்த ஆண்டில் தமிழ்நாடு அரசின் சிறந்த பாடலாசிரியருக்கான விருதினை கவிஞர் வாலிக்கு இந்த பாடல் பெற்றுத் தந்தது.

**வாயின் சிவப்பு**

பிற்கால சோழர் கால இலக்கியமான கலிங்கத்துப்பரணியைப் பாடியவர் ஜெயங்கொண்டார். முதலாம் குலோத்துங்கனுடைய அவைக்களப் புலவராக இருந்தவர். முதன்முதலில் பரணி பாடியவர் இவரே. இவரது வரலாறு அறியப்படவில்லை என்றாலும் இவரது காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாக இருக்கலாம் என அறியப்பட்டுள்ளது. அவர் கலிங்கத்துப்பரணியில்,

**"வாயின் சிவப்பை விழிவாங்க**
**மலர்க்கண் வெளுப்பை வாய்வாங்கத்**
**தோயக் கலவி அமுதளிப்பீர்**
**துங்கக் கபாடம் திறமினோ"**

***(கலிங்கத்துப்பரணி, பாடல் எண் - 61)***

என்று தலைவன்-தலைவியின், கூடல் இன்பத்தை எழுதியிருக்கிறார். இதன் பொருள் என்னவென்று பார்த்தால், இரவில் நெடுநேரம் விழித்திருந்தால் இதழில் இருக்கும் சிவப்புநிறம் விழிக்கு இடம்மாறி விடும். விழியில் இருக்கும் வெண்மை நிறம் இதழுக்கு இடம்பெயர்ந்து விடும். அந்த அளவிற்கு தலைவனும் தலைவியும் தழுவிக் கொண்டு ஒன்றிணைந்து இன்பம் தருக என ஜெயங்கொண்டார் நயம்பட எழுதியிருப்பார். (தமிழ் இணைய பல்கலைக்கழகம்)

1963ல் வெளிவந்த "அன்னை இல்லம்" திரைப்படத்தில் கதாநாயகனும் கதாநாயகியும் இணைந்து பாடும் காதல் பாடலான "மடி மீது தலை வைத்து விடியும் வரை தூங்குவோம்" என்ற பாடலை எழுதியிருப்பார் கவிஞர் கண்ணதாசன். அதில் இடையில் வரும் வரிகளாக, இக்கலிங்கத்துப்பரணி பாடலை

**"வாயின் சிவப்பு விழியிலே மலர்க்கண் வெளுப்பு இதழிலே**
**வாயின் சிவப்பு விழியிலே மலர்க்கண் வெளுப்பு இதழிலே**
**காயும் நிலவின் அழகிலே காலம் நடக்கும் உறவிலே"**

என்று அந்த இலக்கிய பாடலை தழுவி அழகாக எழுதியிருப்பார். பல காதலர்களுக்கு, தம்பதிகளுக்கு இரவினில் கேட்கும் கானமாக இப்பாடல் அப்போது அமைந்திருந்தது.

**பனித்துளியின் பிரதிபலிப்பு**

சங்ககால புலவர்களில் கபிலர் எனும் பெயர்கொண்டு பல புலவர்கள் பல்வேறு காலகட்டங்களில் வாழ்ந்துள்ளனர். இங்கே திருவள்ளுவரையும், திருக்குறளையும் புகழ்ந்து எழுதப்பட்ட திருவள்ளுவமாலை தொகுப்பில் கபிலர் என்பவரால் எழுதப்பட்ட பாடல் ஒன்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. திருவள்ளுவமாலை நூலின் காலம் கி.பி. 11 ஆம் நூற்றாண்டு. அதில் கபிலர் எழுதிய பாடல்

**"தினையளவு போதாச் சிறுபுன் னீர்நீண்ட**
**பனையளவு காட்டும் படித்தால்- மனையளகு**
**வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்**
**வெள்ளைக் குறட்பா விரி"**

***(திருவள்ளுவமாலை, பாடல் - 5)***

இதன் பொருள் என்னவெனில், புல்லின் நுனியில் தினை அளவு சிறிதாகத் தேங்கியுள்ள பனித்துளி அருகிலுள்ள மிக உயரமான பனைமரத்தை உள்ளடக்கி நிழலாக்கிக் காட்டுவது போலச் சிறிய திருக்குறள் மிகப் பெரிய பொருளை உள்ளடக்கிக் காட்டுகிறது. வீட்டுக்கோழி வள்ளைக் கொடியில் உறங்கும் அளவுக்கு நீர்வளம் மிக்க நாட்டை ஆளும் அரசே! இதை உணர்ந்துகொள்.

இந்த பாடலின் உள்ள வரியை தமிழ் திரைப்படத் துறையில் கோலோச்சி மறைந்த கவிஞர் நா. முத்துக்குமார், தான் எழுதிய ஒரு பாடலில் மிகவும் அழகாக பயன்படுத்தி இருப்பார். 2013ல், "கற்றது தமிழ்" ராமின் இயக்கத்தில் வெளியான திரைப்படம் "தங்கமீன்கள்".

இப்படத்தில் வரும் "ஆனந்த யாழை மீட்டுகிறாய்" என்ற பாடலை நா.முத்துக்குமார் எழுதியிருப்பார். இப்பாடல் வெளியான பிறகு மகள்களைப் பெற்ற அத்தனை தந்தையர்களுக்கும் மகள் கீதமாகிப்போனது. மகளுக்காக ஒரு தந்தை பாடும் பாடலது.

அதில்

**"இரு நெஞ்சம் இணைந்து பேசிட**
**உலகில் பாஷைகள் எதுவும் தேவையில்லை**
**சிறு புல்லில் உறங்கும் பனியில்**
**தெரியும் மலையின் அழகோ தாங்கவில்லை"**

என்று எழுதியிருப்பார். கபிலர் எழுதிய பாடலின் வரியை இங்கே நா.முத்துக்குமார் பனித்துளியைப் போலவே பிரதிபலித்திருப்பார். கபிலர் பனித்துளியில் பனைமரத்தை அடக்கி காட்டினார். முத்துக்குமார் மலையினையே அதில் அடக்கிக் காட்டினார். இந்த பாடலை எழுதியதற்காக அந்த ஆண்டின் தேசிய விருது நா.முத்துக்குமாருக்கு கிடைத்தது (தமிழ் இந்துதிசை, 2014) என்றால் இப்பாடல் வரிகளின் வீரியத்தை நாம் புரிந்துகொள்ளலாம்.

### கனவு நிலை

உலகப்பொதுமறையாம் திருக்குறளை எழுதிய பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவர். அவர் எழுதாத பொருளில்லை, எழுதாத செயல் இல்லை. அனைத்திற்கும் குறள் எழுதி வைத்தவர். முப்பால் படைத்த வள்ளுவர் அதில் மூன்றாம் பாலாக காமத்துப் பாலை எழுதியிருக்கிறார். காமத்துப் பாலின்கீழ் 122வது அதிகாரம் கனவு நிலை உரைத்தல் ஆகும். அதில் 1216வது குறள்,

**"நனவென ஒன்றில்லை யாயின் கனவினால்**
**காதலர் நீங்கலர் மன்"**

என்று எழுதியிருப்பார் திருவள்ளுவர். இதன் பொருள், விழிப்பு என ஒன்று மட்டும் இல்லாவிட்டால் கனவில் வந்த காதலர் என்னைவிட்டுப் பிரியவே மாட்டார் என்பதாகும்.

தமிழ் திரைப்படத்துறையில் பெண் கவிஞர்களில், தனி முத்திரை பதித்தவர் கவிஞர் தாமரை. அவர் இந்த இந்த குறளை அப்படியே தான் எழுதிய ஒருபாடலில் பிரதிபலிக்க செய்தார். 2015ல் வெளியான "என்னை அறிந்தால்" திரைப்படத்தில்,

**"இதயத்தில் ஏதோ ஒன்று"**

என்ற பாடலின் இடையில்

**"இது ஒரு கனவு நிலை**
**கலைத்திட விரும்ப வில்லை**
**கனவுக்குள் கனவாய் என்னை நானே கண்டேனே"**

என்று மிக அழகாக எழுதியிருப்பார். இப்பாடல் பட்டி தொட்டியொங்கும் ஒலிக்கும் பாடலாக மாறிப்போனது. பல இளம்பெண்களின் அடிக்கடி கேட்கும் பாடல்களின் வரிசையிலும் இது இடம் பிடித்தது.

### முடிவுரை

சங்ககாலத்து ஆண் பாற் புலவர்களும் சரி, பெண் பாற் புலவர்களும் சரி தாங்கள் கண்டதை, உணர்ந்ததை, காதலை பாடலாகவே எழுதி வைத்தனர். அவற்றின் வழியே வந்த இக்காலக் கவிஞர்களான கண்ணதாசன், கவிஞர் வாலி, கவிஞர் வைரமுத்து, கவிஞர் நா. முத்துக்குமார், கவிஞர் தாமரை என அனைத்து கவிஞர்களும் ஏதேனும் ஒரு வகையில் சங்ககால இலக்கியங்களின் தாக்கத்தை, தங்களது பாடல்களில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பயன்படுத்தி இருக்கின்றனர், என்பது இதன்மூலம் தெளிவாகிறது. திருக்குறள், கலிங்கத்துப் பரணி, குறுந்தொகை, புறநானூறு என அக்காலத்திய பல்வேறு சங்ககால இலக்கியங்கள் வீரம், காதல், சோகம், பிரிவு என அனைத்தையும் பேசி இருக்கின்றன. அதைத்தான் இன்றிருக்கும் கவிஞர்களும் தங்களது திரைப்படப் பாடல்களில் பயன்படுத்தி வருகின்றனர். எதிர்காலத்திலும் பயன்படுத்துவார்கள் என்பது நூற்றுக்கு நூறு உண்மையாகும். சங்ககால தமிழ் இலங்கியங்கள் என்பது மாபெரும் கடல்போல. அதில் திரைத் துறையில் எடுத்து ஆளப்பட்டிருக்கும் பாடல்கள் சிறுதுளி அளவே என்று சொன்னால் அது மிகையல்ல.

**துணை நூற்பட்டியல்**


1. புலியூர் கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், ராயப் பேட்டை, சென்னை (டிசம்பர் 2010)
2. நாடோடி - திரைப்படம், விக்கிபீடியா, https://en.wikipedia.org/wiki/Nadodi
3. இருவர் - திரைப்படம், விக்கிபீடியா, https://en.wikipedia.org/wiki/Iruvar
4. திருமூலரின் திருமந்திரம், தமிழ் இணையப் பல்கலைக்கழகம், சென்னை. https://www.tamilvu.org/slet/l41A0/l4170uri.jsp?song_no=1507&book_id=118&head_id=67&sub_id=2477
5. பார்த்தால் பசி தீரும் - திரைப்படம், விக்கிபீடியா, https://ta.wikipedia.org/s/q9l
6. குறுந்தொகை, தமிழ் இணையப் பல்கலைக்கழகம், சென்னை. https://www.tamilvu.org/slet/l1200/l1200uri.jsp?book_id=22&song_no=57
7. ம.வே.பசுபதி, செம்மொழித் தமிழ் இலக்கண இலக்கியங்கள், தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர். (ஜூன் 2010).
8. கேளடி கண்மணி - திரைப்படம், விக்கிபீடியா, https://ta.wikipedia.org/s/4nfa
9. ஜெயங்கொண்டார், விக்கிபீடியா, https://ta.wikipedia.org/s/qdx
10. திருவள்ளுவமாலை, புராஜெக்ட் மதுரை இணையதளம், https://www.projectmadurai.org/pm_etexts/utf8/pmuni0798.html
11. கபிலர், விக்கிபீடியா, https://ta.wikipedia.org/s/2i8f
12. தங்கமீன்கள் -திரைப்படம், விக்கிபீடியா, https://ta.wikipedia.org/s/3984
13. இந்து தமிழ்திசை இணையதளம், 2014. https://www.hindutamil.in/news/supplements/hindu-talkies/1472-3.html
14. என்னை அறிந்தால் - திரைப்படம், விக்கிபீடியா, https://ta.wikipedia.org/s/45r7